குத்தாலம் (திருத்துருத்தி) ஓங்காரேச்சுரம் உடையார் கோயில் வரலாறு.

REGISTRAR OF BOO
JUL 1951

திருவையாறு, வித்துவான்.

வை. சுந்தரேச வாண்டையார்

எழுதியது.

113452

குத்தாலம்,

ஸ்ரீ கம்பீர விநாயகர் பிரசில் அச்சிடப்பெற்றது.

1951 மார்ச்சு மாதம்.

O23:34.21193K
N51

பொருளடக்கம்.

1. முன்னுரை.
2. மதிப்புரை.
3. நன்றியறிதல் உரை.
4. கோயிலின் அமைப்பு முறை.
5. கோயில் நிலைபெற்றுள்ள இடம்.
6. கோயிலை எடுப்பித்தவர்.
7. கோயில் எடுப்பிக்கப்பெற்ற காலம்.
8. இறைவரின் திருப்பெயர்.
9. ஓங்காரேச்சுரம் என்ற தொடர்க்கு இலக்கணமும் பொருளும்.
10. அம்மன்கோயில் (அ) திருக்காமக்கோட்டம் எடுப்பிக்கப்பெற்ற காலம்.
11. அளிக்கப்பெற்ற நில நிவந்தங்கள்.
12. பொதுச் செய்திகள்.
13. குத்தாலத்தைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு.
14. திருவழுந்தூர் நாடு.
15. விருதராச பயங்கர வளநாடு.
16. சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய சில செய்திகள்.
17. கோயில் கல்வெட்டுக்களின் மூலங்கள்.

(The texts.)

113452

முன்னுரை.

திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

"உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே"

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லா நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெலாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே யவிநாசி யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதீ செய்வ தொன்று மறியேனே.

குத்தாலம் என்னும் இவ்வூர் தஞ்சாவூர்ச் சில்லா, மாயூரந் தாலூகாவில், மாயூரத்திற்கு மேற்கே ஆறுமைல் தூரத்தில், காவிரி யாற்றின் தென்கரையில் இருக்கிறது. குத்தாலம் என்னும் மரத்தின் பெயரால் இவ்வூர் வழங்கப்படுகிறது. குத்தாலம் என்பதை ஒருவகை ஆத்திமரம் என்று, காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய டாக்டர். திரு. உ. வே.சாமிநாதையரவர்கள், மகாவித்துவான், மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரத்தில் கூறியிருக்கின்றார்கள். குத்தாலம் என்பது குற்றாலம் என்றும் சிதைந்து வழங்கிவருகின்றது.

இதன் பழம் பெயர் **திருத்துருத்தி** என்பதாகும். துருத்தி எனினும் அரங்கம் எனினும் ஒக்கும். அதற்கு ஆற்றிடைக்குறை என்று பொருள் கூறியுள்ளார் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார். இவ்வூர் பாடல்பெற்ற கோயில், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காவிரியாற்றின் நடுவில் இருந்தது. இது, "பொன்னியின்நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துன்னியதுருத்தியானை" என்னும் திருநாவுக்கரசரது, தேவாரப்பகுதியால் அறியக் கிடக்கின்றது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்த சுந்தரமூர்த்தி நாயனார் இக்கோயில் காவிரியின் அகன்ற கரையில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். முதலாம் இராசராசன் கல்வெட்டு இதைத் தென்கரைக்கோயில் என்று குறிப்பிட்டுள்ளது. தென்கரை என்பது காவிரிக்குத் தென்கரையாகும். எனவே சுந்தரர் காலத்திலோ, அல்லது அவருக்குச் சற்றுமுன்போ இது தென்கரைத் தலம் ஆகியிருத்தல் வேண்டும்.

இத் துருத்தியாகிய குத்தாலத்தில், **சொன்னவாறறிவார் கோயில், விக்கிரமசோழீச்சுரம், ஓங்காரேச்சுரம்** என்னும் மூன்று பெரிய கற்கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள் முன்னது, தேவாரம்பெற்ற பழம்பெருமையும் சிறப்பும் வாய்ந்ததாகும். அது கோயில் (சிதம்பரம்) திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவரது தேவியாராகிய **செம்பியன் மாதேவியாரால்** முதலாம் இராசராச சோழன்காலத்தில் கற்றளியால் எடுப்பிக்கப்பெற்றதாகும். விக்கிரம சோழீச்சுரம், விக்கிரம சோழனல் எடுப்பிக்கப் பெற்றதாகும். ஓங்காரேச்சுரம் மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தில், ஆளுடைய நாயகரான பிள்ளைசெயதரப் பல்லவராயரால் எடுப்பிக்கப் பெற்றதாகும்.

இந்த ஓங்காரேச்சுரம் மிகப்பழுதுற்ற நிலையில் இருந்தமையால் இதைமுன் இருந்த வண்ணமே புதுப்பிக்க வேண்டுமென்னும் கருத்து உடையவராய், இவ்வூர்க்கு மேல்பால் சுமார் அரைமைல் தூரத்தி லுள்ள இராசகோபாலபுரம் என்னும் ஊரினரும், குத்தாலம் கீழமில் என்னும் R. M. ரைஸ்மில் மேனேஜரும் ஆகிய உயர்சைவத்திரு. **M. S. வேங்கடராம அய்யர்** அவர்கள், தாமே பொறுப்பாளராக இருந்து, தேவகோட்டை, உயர்திரு. ராம. அரு. அரு. ராம. **அருணாசலஞ் செட்டியார்** எஸ்டேட்டில் ஏற்படுத்தப்பட்ட பதிகம் பெற்ற சிவலாய ஸ்தாபனப்பணத்திலிருந்து இருபத்தையாயிரரூபாய் பெற்றும், தம்மால் இயன்ற பொருளை உதவியும், அன்பர்களிடம் பொருள்கூட்டியும், சர்வதாரி ஆவணி 14-இல் (29-8-48) இத் திருப் பணியை, திருவருள் துணைகொண்டு பெருமகிழ்வுற முற்றுவித்துள்ள தோடு அமையாதுமேன்மேலும் திருக்கோயிலுக்கு வேண்டுவனவற்றுள் நாட்டம்கொண்டு வருகின்றனர். திரு.வேங்கடராமஐயருடைய சிவபத்தியைப் பெரிதும் பாராட்டுகின்றேன். அவர் வேண்டும் நல மெலாம்பெற்றுநீடு வாழுமாறு, ஆனந்தவல்லி உடனுறை ஓங்காரேச்சுர முடையாரைப் பன்முறையும் வணங்குகின்றேன்.

யான் 19—1—51, 22—1—51, 23—1—51, 24—1—51, மாலை நேரங்களில் இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களை எல்லாம் படித்து எழுதினேன். 22—1—51 திங்கட்கிழமை மாலையில் இக் கோயில் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டை எழுதிக்கொண்டிருந்தபோது, இக்கோயிலைப் பார்வையிடவந்த உயர்திரு. **சுப்பிரமணியப்பிள்ளை** அவர்கள்(Religious Endowment Board Assistant Commissioner) யான் விரைந்து எழுதுவதைப்பார்த்து மகிழ்ந்தார்கள். அவர்களும் சில வரிகளைப் படித்துக் காட்டினார்கள். கல்வெட்டின் மூலங்களை எழுதுவதோடு அமையாது, அவைகளால் அறியப்படும் சரித்திரவரலாறுகளையும், செய்திகளையும் மக்கள் அறிந்து கொள்ளுமாறு செய்தல் வேண்டுமென்றும், அவ்வாறு செய்யின், அவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாகும் என்றும் கூறி, ஊக்க மளித்துச்சென்றுள்ளார்கள். அன்று அவர்களோடு உடன்வந்திருந்த திருவாளர்களான, M. S. வேங்கடராமய்யர், S. குஞ்சிதபாதம் பிள்ளை இவர்களின் விருப்பப்படி, இக்கோயில் வரலாற்றை எழுதினேன். இவ்வரலாற்றின் இறுதியின் இக்கோயில் கல்வெட்டுக்களின் மூலங்களுள் (The texts) சூரிய வெப்பத்தால் உதிர்ந்தனபோக எஞ்சியவைகளையும் சேர்த்துள்ளேன்.

இக்கோயில் கல்வெட்டுக்களை அரசியலார் படியெடுத்துச் சென்றும், அவைகள் தென்இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளிவந்தில. ஆனால் அவைகளின் சுருக்கங்களைக் கல்வெட்டுத்துறை யாளர் 1926-ஆம் ஆண்டு அறிக்கையில் (Annual reports on South Indian Epigraphy for the year ending March 31st 1926) வெளியிட்டிருக்கின்றனர். இம்முயற்சியில் என்னைப் புகுத்திய திருவருளை வழுத்துகின்றேன்.

குத்தாலம்,
20—3—51.

இங்ஙனம்,
வை. சுந்தரேச வாண்டையார்.

பசுமலை, நாவலர்,

உயர்திரு. S. சோமசுந்தர பாரதியார் M. A., B. L., அவர்கள்

அளித்தருளிய

மதிப்புரை.

குத்தாலம், ஓங்காரேச்சுரம் உடையார் கோயில் வரலாறு எனும் சிறு கட்டுரை பெற்றுப் படித்துப் பார்த்தேன். ஆசிரியர், திருவாளர். வை. சுந்தரேச வாண்டையார் அவர்களின் சிவநெறிச் செல்வப்பற்றும், பழைய கோவில் வரலாறுகளைத் துருவி வெளியிடும் முயற்சியிலவர்கள்கொண்டுள்ள ஆர்வமும் இச்சஞ்சிகையால் வெளியாகும்.

கி-பி. 12, 13ஆம் நூற்றாண்டுகளில் சோணாட்டை ஆண்ட மூன்றாங் குலோத்துங்க மன்னர் காலத்தில் அவூரயர் ஆளுடையநாயகர் செயதரப்பல்லவராயரால், ஓங்காரேச்சுரம் எடுப்பிக்கப் பெற்றதாகக் கல்வெட்டுக்களின் சான்றுகாட்டி ஆசிரியர் வாண்டையாரவர்கள் விளக்கியுள்ளார்.

ஜீரணமான இந்தக் கல்தளியை பல சைவத் தமிழ்ச்செல்வர் வாழு மாவட்டத்தில், அவர் பராமுகமாயிருக்க, முன்வந்து பணமும் முயற்சியும் தந்து புதுப்பித்த ஸ்ரீ வேங்கடராமையரவர்களின் சிவநேசத் தொண்டைச் சிறப்பாக குறிப்பிட்ட திரு. வாண்டையார் அவர்களின் சால்பு பாராட்டற்பாலது. ஸ்ரீ ஐயரவர்களின் சிவநேசப்பத்தி நடுவுநிலை மறவாத தமிழ் மக்கள் அனைவரும் வியந்து நயந்து போற்றற்குரியது.

எளிய இனிய தெளிவுடைய தமிழ்நடையில், பழைய வரலாற்றைப் புதிய முறையில் யாவரும் படித்துப் பயனுறச் சுருக்கமும் பொருட்பெருக்கமும் ஒருங்கமைய இவ்வுரை எழுதப்பெற்ற பெற்றிமை மெச்சத்தக்கதாகும்.

பசுமலை
19-4-51
சித்திரை-6வ

இளசை கிழான், ச. சோ. பாரதி.

நன்றியறிதல் உரை.

இலக்கணப் பெரும்புலவர் சோழவந்தான் **அரசஞ் சண்முகனர்** அவர்கட்குப் பின்பு தொல்காப்பிய நூற்பாக்களை நன்கு துருவி ஆராய்ந்து, பிறவுரைகளை மறுத்துத் தாம் கண்ட நல்லுரைகளைத் திட்ப நுட்பம் மிக்குற எழுதி உதவியவர் நலமிகு புலமைமிக்க நாவலர், இளசைகிழார், **திரு. S. சோமசுந்தரபாரதியார்** *M. A., B. L.,* அவர்களேயாவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பகுதித் தலைவராய் விளங்கி, இவர் ஆற்றிய தொண்டுகள் மிகப் பலவாகும். சிறந்த சொல்வன்மையும், செய்யுள் இயற்றும் ஆற்றலும், தம் உள்ளத்தில் தோன்றியவற்றை அஞ்சாது எடுத்துரைக்கும் ஆண்மையும் உடைய இப்புலவர் பெருந்தகையார் என் வேண்டுகோளுக்கு இணங்கி இச் சிறுநூலுக்கு ஒரு மதிப்புரை அளித்து, ஆராய்ச்சித்துறையில் எனக்கு ஊக்கத்தை அளித்ததை யான் என்றும் மறவேன். இவர்களது நல்வாழ்வு கருதி எனது வழிபடு கடவுளாகிய கரும்படு சொல்லி உடனுறை புறம்பயத்து இறைவனை வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

வை. சுந்தரேசன்.

கோயிலின் அமைப்புமுறை

திருக்கோயில் கிழக்கு நோக்கியது. கருப்பஇல், அர்த்த மண்டபம் மகாமண்டபம், நடராசர் மண்டபம் என்னும் நான்கு பிரிவுகளையும், இரண்டு திருச்சுற்றுலைகளையும் (பிராகாரங்களையும்) கொண்டுள்ளது. இதற்கு முதற்கோபுரவாயிலாகிய **திருத் தோரணத்திருவாயில்,** இரண்டாம் கோபுரவாயிலாகிய **திருமாளிகைத்திருவாயில்,** அர்த்தமண்டபத்துத் திரு வாயிலாகிய **திருவணுக்கன் திருவாயில்** என்னும் மூன்று வாயில்கள் இருக்கின்றன. எனவே தெய்வப்பாக்கிழாராகிய சேக்கிழா ரால் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள மூன்று வாயில்களும் இக்கோயிலுக்கு அமைந்திருக்கும் பெருஞ்சிறப்பு, கண்டு மகிழ்தற்குரியதாகும். கருப்பஇல்லின் தென்பால், அறம் உரைத்த நாயனாரின் அழகுதிகழும் படிமம் இருக்கின்றது. அப்பெருமானுக்கு அருகில் சனகர் முதலானோர் ஒடுங்கியநிலையில்இருந்து அறம் கேட் -கும்முறையில் செதுக்கப்பட்ட திருமேனிகள் இருக்கின்றன. கருப்ப இல்லின் மேல்பால் இலிங்கோற்பவமூர்த்தியின் (அண்ணமலைநாதரின்) படிமமும், வடபால் பிரமதேவரின் படிமமும் இருக்கின்றன. அர்த்த மண்டபத்தின் வடபால் கொற்றவையின் (துர்க்கை அம்மனின்) படிமமும், தென்பால் கூத்தாடுந்தேவரின் (நடராசப்பெருமானின்) படிமமும் இருக்கின்றன. இவைகளின் சிற்பவன்மைகள் கண்டார் உள்ளத்தைக் கொள்ளைகொள்வனவாகும். அம்மட்டோ, மூன்றுங் குலோத்துங்க சோழன் காலத்தில், சிற்பவன்மை (Architecture) நம் நாட்டில் எவ்வளவு உயரிய நிலையில் இருந்துள்ளது என்பதையும் அப்படிமங்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

குறிப்பு:— படிமம் = தெய்வத்தன்மை பொருந்திய உரு; பிரதிமா என்ற வடசொல்லின் திரிபு; என்பர் அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர்.

கோயில் நிலைபெற்றுள்ள இடம்.

இக்கோயில் நிலைபெற்றுள்ள ஊர் மூன்றுங்குலோத்துங்க சோழன் காலத்தில் **குற்றாலமுடையான் பிர்மதேசம்.** என்று பெயர் பெற்றிருந்தது. அவ்வூரின் மேற்கிலுள்ள ஊர்க்குளத்து வட கரையில் இக்கோயில் எடுப்பிக்கப்பெற்றதாகும். இச்செய்தியை "ஸ்ரீ குற்றாலம் உடையான் பிர்மதேசத்து மஹாசபையோம் எழுத்து. நம்மூர்க்கு மேலைஊர்குளத்து வடகரையில் பிள்ளை ஐயதரப்பல்லவ ராயர் எழுந்தருளுவித்த ஒங்கார ஈஸ்வரமுடையார் கோயில்" என்னும் கல்வெட்டுப்பகுதியால் அறியலாம்.

குறிப்பு:— பிர்மதேசம் = பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதி. **இதுபட்டவிருத்தி** என்றும் கல்வெட்டுக்களில் வழங் கப்பெறும்.

கோயிலை எடுப்பித்தவர்

இக்கோயிலை எடுப்பித்தவர் கெயமாணிக்க வளநாட்டுப்பட்டினக்கூற்றத்துக் குற்றாலமுடையார், அரையர் ஆளுடைய நாயகரான **செயதரப்பல்லவராயர்** ஆவர். மூன்றாங்குலோத்துங்கசோழன் காலத்தில் இருந்தவர். சிறந்த சிவபத்திச்செல்வர். ஓங்காரேச்சுவரம் என்னும் பெயரால் இக்கோயிலை எடுப்பித்ததிலிருந்து ஓங்காரத்தில் இவருக்குள்ள ஈடுபாடு போற்றற்கு உரியதாகும். (ஓங்காரம் = பிரணவம்)

குறிப்பு:— முதலாம் இராசராச சோழன் காலத்தில் (கி-பி 985—1014) சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது அவற்றுள் க்ஷத்திரியசிகாமணிவளநாடு என்பது ஒன்றாகும். இது நம் தஞ்சாவூர்ச்சில்லாவில் அரிசிலாற்றுக்கும் குடமுருட்டி ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். இது, *அளநாடு, இன்கண்நாடு, மருகல்நாடு, மறையூர்நாடு, பனையூர்நாடு, **பட்டினக்கூற்றம்**, செற்றூர்க்கூற்றம், தேவூர்நாடு, திருநறையூர் நாடு, திருவாரூர்க்கூற்றம், வேளாநாடு என்னும் பதினொரு பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவ்வளநாடு முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி-பி 1070—1120) கெயமாணிக்கவளநாடு என்னும் பெயர் எய்திற்று அப்பெயரே பிற்பட்ட சோழமன்னர் காலங்களிலும் நிலவுவதாயிற்று.

பட்டினக்கூற்றம்:— இது மேற்குறித்த கெயமாணிக்கவளநாட்டின் ஒருபிரிவாகும். எனவே பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டுள்ள ஒரு சிறுநாடு பட்டினக்கூற்றமாகும். திருக்கண்ணங்குடி, ஆனமங்கலம், சிவாலயக்குடி உவர்க்குடி முதலான ஊர்கள், இக்கூற்றத்திலுள்ள சில ஊர்கள் என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

கோயில் எடுப்பிக்கப்பெற்ற காலம்

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் அனைத்தும் மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தில் பொறிக்கப்பெற்றனவாகும். அவற்றுள் அம்மன்னன் அரியணை ஏறிய இருபத்தைந்தாம் ஆண்டில் தீட்டப்பட்டதே பழமையானதாகும். அம்மன்னன் அரியணை ஏறிய கி-பி1178 உடன் இருபத்தைந்தைக்கூட்ட கி-பி 1203 ஆகும். எனவே இற்றைக்கு 748 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்தது இக்கோயில்.

---

* S. I. I. Vol II Part V. Introduction.

3

இறைவரின் திருப்பெயர்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் **ஓங்கார ஈஸ்வரமுடைய பரமசுவாமி** என்றும், **ஓங்காரேஸ்வரமுடையார்** என்றும் கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றனர்.

ஓங்காரேஸ்வரம் என்ற தொடருக்கு இலக்கணமும் பொருளும்.

ஓங்கார + ஈஸ்வரம் = ஓங்காரேஸ்வரம் என்று ஆகும். வடமொழி குணசந்தி. ஈஸ்வரம் என்பதற்குக் கோயில் என்று பொருள். [ஈஸ்வரம் என்றசொல் ஈச்சுரம், ஈச்சரம் என விகற்பித்தும் வழங்கப்பெறும்] எனவே ஓங்காரத்தின் பெயரால் எடுப்பிக்கப்பட்டகோயில் என்பது இத்தொடரின்திரண்ட பொருளாகும். ஓங்காரம் இறைவரைப் பூசித்துப் பேறுபெற்ற தலம் என்றும் பொருள்கொள்ளலாம். ஆயின் அவ்வாறுகொள்வதற்குக் கல்வெட்டில் ஆதாரம் இலது. என்னே? இக்கோயில் முதல்முதல் மூன்றுங்குலோத்துங்க சோழன் காலத்தில் எடுப்பிக்கப்பெற்றது ஆதலின்.

குறிப்பு:—

இது காளி பூசித்துப் பேறுபெற்ற கோயில் என்று இவ்வூர்ப்பாடல் பெற்றதலமாகிய சொன்னவாரறிவார் கோயில் புராணம் கூறுகின்றது.

இக்கோயில் மகாமண்டபத்தின் வடபுறச்சுவரில் இன்றும் யாரும் அறியும்வண்ணம் "ஓங்காரஈஸ்வரம் உடைய பரமஸ்வாமி" என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. சிலகல்வெட்டுக்களில் ஓங்காரீஸ்வரம் உடையார் என்ற தொடரும் காணப்படுகிறது. ஓங்கார + ஈஸ்வரம் ஓங்காரேஸ்வரம் ஆகும் என்று முன்னரே குறித்துள்ளேன். ஓங்காரீஸ்வரம் என்று பொறிக்கப் பெற்றிருப்பது கல்தச்சனல் நேர்ந்த பிழையாகும். மாநாகம் பூசித்துப் பேறுபெற்ற பதியாகிய திருநாகேச்சுரம், திருநாகீஸ்வரம் என்றும், அவ்வூர்க் கல்வெட்டுக்கள் சிலவற்றிலும், தஞ்சாவூரில் இராசராசசோழனல் எடுப்பிக்கப்பெற்ற இராசராசேச்சரம், அக்கோயில் கல்வெட்டுக்கள் சிலவற்றுள் இராஜராஜீஸ்வரம் என்றும் பொறிக்கப்பட்டிருக்கின்றன; இவைகள் யான் கூறியதற்குச்சான்று பகரும்.

ஓங்காரி + ஈஸ்வரம் = ஓங்காரீஸ்வரம் என்றும் ஆகும். வடமொழி தீர்க்கசந்தி. ஓங்காரியாகிய காளியால் பூசிக்கப்பெற்ற கோயில் என்று பின்னுள்ளோர் பொருள்கொண்டு புராணத்தில் புகுத்தியுள்ளனரோ? அறிகின்றிலம். இதை எல்லாம் அறிஞர்கள் நடுநிலையிலிருந்து முடிவுசெய்ய வேண்டும்.

இக்கோயிலை எடுப்பித்த செயதரப்பல்லவராயர், முன்னுள்ள கோயிலை இடித்துப் புதிதாகக் கட்டியுள்ளார் என்று கல்வெட்டில் கூறப்படவில்லை. மேலும் இக்கோயிலை எடுப்பிப்பதற்கு இவர் தான் நிலம் விட்டுள்ளார் என்றும் இக்கோயில் கல்வெட்டில் பொறிக்-கப்பெற்றிருக்கின்றது. இவைகளையும் நடுநிலையாளர் கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

அம்மன்கோயில் அல்லது திருக்காமக்கோட்டம்

எடுப்பிக்கப்பெற்றகாலம்.

அம்மன்கோயிலை எடுப்பித்தவரும் இச்சயதரப்பல்லவராயர் ஆவர். இச்செய்தியை "இந்நிலம் ஒருமா முக்காணி அரைக்காணிக் கீழெட்டு மாக்காணி அரைக்காணியும் இச்சயதரப்பல்லவரையர் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும், திருநந்தவனமும் உள்ளிட்டன யிவை-யிற்றுக்கு உடையார் ஓங்காரீஸ்வரமுடையார்க்கு குடுக்கையால்"—என்னும் கல்வெட்டுப்பகுதி அறிவிக்கின்றது.

குறிப்பு:— ஸ்ரீகோயில் என்றால் அம்மன் கோயில் என்று பொருள்.

அளிக்கப்பெற்ற நில நிவந்தங்கள்.

திருவழுந்தூர் நாட்டு அனபாயபுரத்து ஊரார் தங்கள் ஊரின் கிழக்கில், தலைகணி வாய்க்காலுக்கு மேற்கும், மாதிரிமங்கலத்து எல்லைக்குலைக்குக் கிழக்கும், பளைவாய்க்காலுக்கு வடக்கும் திருக் களிற்றுப்படி நீர்பாய் நிலத்துக்குத் தெற்கும் ஆக இசைந்த இப்பெரு நான்கெல்லையின் நடுவுபட்ட நிலம் ஒருமா அரைக்காணியை இக் கோயில் (ஓங்காரேஸ்வரம் உடையார் கோயில்) ஆதி சண்டேஸ்வர தேவர்க்குத் திருநாமத்துக்காணியாக இறையிலிசெய்து கொடுத் துள்ளனர். இந்நிகழ்ச்சி மூன்றாங்குலோத்துங்க சோழனின் 25-ஆம் ஆண்டில் அதாவது கி-பி 1203 இல் நிகழ்ந்ததாகும்.

குறிப்பு:— திருநாமத்துக்காணியாக = சிவபெருமானுக்கு உரிய நிலமாக என்பது பொருள். இங்கே ஆதி சண்டேஸ்வரதேவர் திரு நாமத்துக்காணியாக என்றால் ஆதி சண்டேஸ்வரருக்கு உரிய நிலமாக என்பது பொருள்.

இறையிலி = வரி இல்லாமல் (With out revenue tax) இத்தகைய நிலங்களை இக்காலம் சாதாரணமக்கள் இரவெலி என்று வழங்கு கின்றார்கள். அது தவறுடையதாகும்.

அரையர் ஆளுடைய நாயகரான செயதரப்பல்லவரையர் காவிரி நல்லூரில் தமக்குச்சொந்தமான நிலத்தில் ஒருமா நிலத்தை

இக்கோயில் ஆதி சண்டேஸ்வரதேவர்க்குத் திருநாமத்துக்காணியாக விட்டுள்ளனர்.

இது நிகழ்ந்தது மேற்குறித்த குலோததுங்கசோழ தேவரின் இருபத்தைந்தாம் ஆண்டில் அதாவது கி-பி 1203 ஆகும்.

திருவழுந்தூர் நாட்டுப் பல்லவ நாராயணபுரமான உலகமா தேவிபுரத்து ஊரார், தங்கள் ஊர்ப்பொதுவில், ஊரின் கீழ், நீர்பாய் நிலத்துக்கு மேற்கும், தச்சன் இறைபிலிக்குக் கிழக்கும், தில்லை நாயகன் வாய்க்காலுக்கு வடக்கும், குளத்தூருடையான் கொல்லை நிலத்துக்குத் தெற்கும் என இசைந்த இந்நான்கெல்லையுள் ஒருமா வரையும் காணியும் ஆகிய நிலத்தை ஓங்காரேச்சுரமுடையார்க்குத் திருநாமத்துக் காணியாக விட்டுள்ளனர்.

இவ்வாறு விட்டது மூன்றாங் குலோத்துங்கசோழ தேவரின் முப்பதாம் ஆண்டில் அதாவது (1178+30) = கி-பி 1208 ஆகும்.

பல்லவநாராயணபுரமான உலகமாதேவி ஊரார் தங்கள் ஊரின்கீழிருந்த படுகை நிலத்தை ஓங்காரேச்சுரமுடையார்க்குத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளனர். இது நடந்தது திரிபு--வனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் முப்பத்தெட்--டாவது ஆண்டு முப்பத்தொன்பதாவது நாள் ஆகும்.

குறிப்பு:— இங்குக்குறித்த அரசன் மூன்றாங்குலோத்துங்க சோழனேயாவன். கோ நேர் இன்மை கொண்டான் = தனக்கு ஒப்பாக எவரும் இல்லாதவன். இது இம்மன்னன் அணிந்துவந்த பட்டப்பெயர்களுள் ஒன்றாகும்.

திருவழுந்தூர் நாட்டுப் பூவாலசுந்தரபுரத்து நகரத்தார் தங்கள் ஊரின் கீழ் ஓங்காரேச்சுரமுடையார்க்குத் திருநாமத்துக்காணியாக ஒரு படுகை நிலத்தைக் கொடுத்துள்ளனர். இது நிகழ்ந்தது மூன்றாங் குலோத்துங்கசோழன் காலத்தில்.

இத்திருக்கோயிலை எடுப்பித்த செயதரப்பல்லவரையர் மெத்--தங்குடியில் மூன்றே முக்காலே இருமாவரை முந்திரிகைக்கீழ்எழுமா--வரை முந்திரிகை நிலத்தையும், உலகமாதேவிபுரத்தில் வேலி நிலத்தை--யும், அருமொழிதேவன் என்னும் பெயருள்ள நந்தவனத்துக்கு ஒன்றே இரண்டுமா நிலத்தையும், குலோத்துங்க சோழன் குற்றா--லத்தில் இரண்டுமா நிலத்தையும், கொடுத்துள்ளனர். மேலும் குலோத்துங்க சோழன் குற்றாலத்து இருபத்தொன்றே சொச்சம் நிலத்தை' பிராமணக்காணியாகவும் கொடுத்துள்ளனர். ஓங்காரேச்சுரம்

உடையார்க்குத் திருமடைவிளாகமும் திருநந்தவனமும் உள்ளிட்ட-வைகளுக்கு அரையே இருமா நிலத்தையும் கொடுத்துள்ளார்.

இதுநிகழ்ந்தது மூன்றுங்குலோத்துங்கசோழ தேவரின் இருபத்தொன்பதாம் ஆண்டாகும். அதாவது கி-பி 1207.

ஓங்காரேச்சுரம் உடையார் கோயில் தேவகன்மிகள், இறை-வனுக்கு நிலம் கொடுத்த செய்தியை உணர்த்துகின்றது. மற்றொரு கல்வெட்டு.

திருவழுந்தூர் நாட்டு ஆளுடையநாயகச்சேரி மகாசபையார் ஓங்காரேச்சுரமுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வரதேவர்கன்மி-களுக்கு, பிள்ளை ஜயதரப்பல்லவராயர் நிச்சயித்து கைஓலை எழுதிய-படி, தங்கள் ஊரின் கீழ் இருமாவரை நிலத்தைக் கொடுத்துள்ளனர். இதுநிகழ்ந்தது மூன்றும்குலோத்துங்கசோழ தேவரின் முப்பதாம் ஆண்டாகும்.

திருப்பேர் தக்ஷிணாமூர்த்திப்பட்டரும், திருப்பேர் சொன்ன-வாறறிவார்பட்டரும், திருவழுந்தூர் நாட்டு குற்றாலமுடையான் பிர்மதேசத்துத் திருச்சிற்றம்பலச்சேரியில் ஆயிரத்து முன்னூற்றுச் சின்னம் குழியை ஓங்காரேச்சுரமுடையார்க்குத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளனர். இதுநிகழ்ந்தது மூன்றுங்குலோத்-துங்கசோழ தேவரின் முப்பத்தாறுவது ஆண்டாகும். [இக்கல்வெட்டு இரண்டாம் கோபுரத்துத் தென் மதில்புறச்சுவரில் இருக்கிறது. மிகவும் சிதைந்துபோய்விட்டது.]

இவைகளேயன்றி, மகாமண்டபத்தின் தென்புறச்சுவரில் காணப்படும், முறைமாறிவைத்துக் கட்டப்பட்டுள்ள, துண்டுக்கல்-வெட்டுஒன்றில் இருவேலி நிலமும், மற்றொரு கல்லில் ஆயிரத்து மூன்-னூற்றுச்சின்னம் குழிகளும் காணப்படுகின்றன. இன்னணம், இக்-கோயிலுக்கு அன்பர் இட்ட நிலம் நித்தியநைமித்தியங்களுக்குப் போதுமானதாய் இருந்தது.

இத்தர்மங்களை அழித்தார் உண்டாகில் அவர் பெரும்பற்றப் புலியூரிலும், திருவாரூரிலும் மற்றுமுள்ள திருப்பதிகளிலும் செய்த பாவத்துக்கு உள்ளாவர் என்று காப்புரையாக ஒரு துண்டுக்கல்வெட்-டிலும் குறிக்கப்பெற்றிருக்கிறது.

பொதுச்செய்திகள்.

இக்கோயில் கல்வெட்டுக்களுள்சில "ஸ்வஸ்திஸ்ரீ புயல்வாய்த்து மண்வளர என்ற பாட்டெழுதி" என்று தொடங்கப்பெறுகின்றன.

அம்முழுப்பாட்டையும் அறிய விரும்புவார்க்குப் பயன் படும்படி
அதைக்கீழேகுறிப்பிடுகின்றேன்:—

"புயல்வாய்த்து மண்வளர புலியாணையும் சக்கரமும் செயல்
வாய்த்த மனுநூலுஞ் செங்கோலுந்திசை நடாத்திக் கொற்றவையுடன்
திருமகிழ கொடுங்கலிகெட, குளிர்வெண்குடைக் கற்பகாலம் புவி-
-காப்ப கதிரவன் குலமுடிகவித்து தனியாணை விட்டாண்மை செய்து
வடமன்னரைத் தன்னடிப்படுத்து, முனிவாறிக் கச்சிபுக்குமுழுதாசை-
-யும் திறைகவர்ந்து, தண்டொன்றால் வழுதி மைந்தனைமூக்கரிந்து தமிழ்
மதுரைகொண்டு, விக்கிரமபாண்டியற்குக் கொடுத்து மீண்டபி
நெடுத்துவந்த நெட்டூரிலெதிர்ந்த வீரபாண்டியனை முடித்தலைகொண்-
-டமர்முடித்தவங்மடக்கொடியை வேளமேற்றி திருவிழந்த தென்ன-
-வரும் சேரலரும் வந்திறைஞ்சி யரியணையின் கீழிருப்ப, அவர்
மூடிமேலடிவைத்து வீரகேரளனை வெங்கொண்டு விறல்தரித்து பருதி-
-குலபதியென்று திருநாமம்தரித்த பாண்டியற்கு இருநெதியும் பரிசட்-
-டமும் இலங்குமணிக்கலனுநல்கி ஈழத்தான் முடிவாடிவாழதாளிணை
சூட்டி செம்பொன் வீரஸிம்மாஸனத்து புவனமுழுதுடையாளொடும்
வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரிபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்-
-திகள்மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய
ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு"—

N. B. இப்பாடல் தென்இந்தியக்கல்வெட்டுத் தொகுதி-
-யிலிருந்து எடுத்து ஈண்டு எழுதலாயிற்று.

குறிப்பு:— இப்பாடல் ஆசிரியப்பாவாகும். இதற்கு
மெய்க்கீர்த்தி அல்லது மெய்ப்புகழ் என்று பெயர். இதற்கு இலக்-
-கணம் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை இவைகளில் கூறப்-
பட்டிருக்கிறது. இத்தகைய மெய்க்கீர்த்தி விரிவாகத் தொடங்கிய
காலம் முதலாம் இராசராசசோழன் காலத்தில் ஆகும்.

இம்மெய்க்கீர்த்தியில் அரசனுடைய வீரச்செயல்கள் கூறப்-
பட்டிருக்கும். இம்மெய்க்கீர்த்தியின்றேல் தமிழ் நாட்டு வென்றி
வேந்தர்களுடைய வரலாற்றை அறிய இயலாது போயிருக்கும். கல்
வெட்டுக்களில் இதுபோன்ற அரசர்களுக்குரிய மெய்க்கீர்த்திகளை
முதலில் எழுதி, அதன் பின்னர், இன்னார் இன்ன அறத்தின்
பொருட்டு இவ்வளவு பொருள் வைத்துள்ளார் என்று குறிக்கப்பட்-
-டிருக்கும். அம்முறையில், மேற்குறித்தபாட்டின் தொடக்கம்
மாத்திரம் இக்கோயில் கல்வெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இம்மெய்க்கீர்த்தியில் "புயல்வாய்த்து..................ஆண்மை
செய்து"— வரை மூன்றாங்குலோத்துங்கனுடைய ஆட்சிச் சிறப்புக்
கூறப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவனுடைய வெற்றிச்சிறப்புக்
கூறப்பட்டுள்ளது.

இவ்வரசனுடைய வெற்றிச்சிறப்பு:—

வடமன்னரைத்தன்னடிப்படுத்தினன். காஞ்சிபுரத்து அரச-
-னைத்தனக்குத் திறைகட்டும்படிச் செய்தனன். மதுரையை ஆண்ட
வீரபாண்டியனை வென்று அவன் நாட்டை விக்கிரமபாண்டியனுக்குக்
கொடுத்தான். மீளவும் நெட்டூரில் தன்னைவந்து எதிர்த்த வீரபாண்-
-டியனை வென்றான். அவன் தேவியாரைத் தன் அந்தப்புரத்துப்-
-பெண்களுக்கு பணிவிடை புரியச்செய்தான்.

விக்கிரமபாண்டியன் **பருதிகுலபதி** என்று பட்டஞ்சூட்டிக்-
-கொண்டு ஆண்டான். பின் இலங்கை அரசனை வென்றான்.

குத்தாலத்தைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

இவ்வூரைத்தன்னகத்துக் கொண்டுள்ள நாடு முதலாம் இராச-
-ராச சோழன் காலம் முதல் உய்யக்கொண்டார் வளநாடு என்னும்
பெயர் பெற்றிருந்தது. இது காவிரிக்கும், அரிசிலாற்றுக்கும்
இடைப்பட்ட நிலப்பரப்பாகும்.

இது முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் இராசநாராயண
வளநாடு என்னும் பெயர்பெற்றது. மூன்றாங்குலோத்துங்கசோழன்
காலத்தில் இவ்வளநாடு ஜயங்கொண்டசோழ வளநாடு என்னும்
பெயர் எய்திற்று. அதுவே பிற்காலத்துச் சோழர், பாண்டியர்,
நாயக்கர் காலங்களிலும் நிலவுவதாயிற்று.

திருவழுந்தூர் நாடு.

மேற்குறித்த வளநாடு பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
அவற்றுள் திருவழுந்தூர் நாடு என்பது ஒன்றாகும். குத்தாலத்துக்குத்
தெற்கே, சுமார் மூன்றுமைல் தூரத்தில் உள்ள திருவழுந்தூர்
என்னும் பாடல்பெற்ற ஊரைத் தலைமையாகக்கொண்டது இந்
நாடாகும்.

குறிப்பு:— இக்காலர் இத்திருவழுந்தூரை, மக்கள் தேர-
-ழுந்தூர் என்றும், மாயூரத்திற்கு அண்மையில் உள்ள திருஇந்தளூரைத்
திருவழுந்தூர் என்றும் தவறாக வழங்குகின்றனர்.

விருதராச பயங்கர வளநாடு.

முதலாம் இராராசசோழன் காலத்தில், காவிரிக்கும், சிதம்-
-பரத்துக்கு வடபால் ஓடும் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட பெரு
நிலப்பரப்பு இராசேந்திரசிங்க வளநாடு என்னும் பெயர் பெற்றி-
ருந்தது. அதன் கீழ்ப்பகுதி முதற்குலோத்துங்கசோழன் காலத்தில்

விருதராச பயங்கர வளநாடு என்னும் பெயர் எய்திற்று. அப்பெயரே பிற்பட்டார் காலங்களிலும் விளங்குவதாயிற்று.

சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய சில செய்திகள்.

முதற்குலோத்துங்க சோழன், சுங்கந்தவிர்த்த சோழன் என்று இக்கோயில் கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றான். அவனது ஆட்சியின் பதினாறும் ஆண்டில் நிலங்கள் சோழநாட்டில் அளக்கப் பட்டன.

மூன்றாங்குலோத்துங்க சோழன் திரிபுவனச்சக்கரவர்த்திகள் கோநேரின்மை கொண்டான் வாணதராயன் என்று அழைக்கப் படுகிறான்.

இக்கோயில் கல்வெட்டுக்களின் தொடக்கத்தே "ஹர:—" என்று தொடங்கியிருப்பதிலிருந்து இம்மன்னனும், இக்கோயிலை எடுப்பித்தசெயதரப்பல்லவரையனும் சிறந்த சிவநெறிப்பற்றுடையவர் என்பதை அறியலாம்.

Inscription No 1.

ஓங்காரேச்சுரம் உடையார்

கோயில் கல்வெட்டுக்கள்.

கல்வெட்டு இருக்கும் இடம்:— மகாமண்டபத்தின் வடபுறச் சுவர்.

(வரி 1) ஸ்வஸ்தி ஸ்ரீ ஓங்கார ஈஸ்வரம் உடைய பரம சுவாமிக்கு } உ. ஹ•ரா: || — ஸ்வஸ்திஸ்ரீ: உ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் வாணுதராயனுக்கு, கெய மாணிக்க வளநாட்டு, பட்டினக் கூற்றத்துக் குற்றாலமுடையான் அரையன் ஆளுடைய நாயகன் செயதரப் பல்லவரையன், ஜயங்கொண்ட சோழவளநாட்டு, திருவழுந்தூர் நாட்டுக் குற்றாலமுடையான் பிர்மதேசத்து உடையார் ஓங்காரீஸ்வரமுடையார்க்குத் திருநாமத்துக் காணியாகவும், இவ்வூரில் இவன்வைத்த பிராமணர்க்குக் காணியாகவும் இந்நாயனுர் பிர்மதேயம் மேற்குத்........யிலும், பல்லவன் நாராயணபுரமான உலகமாதேவி .... தேவதாந நந்தவனம் அருமொழி .... பயங்கர வளநாட்டுமே........

(வரி 2) ட்டு ஆயங்குடி ஆன குலோத்துங்கசோழன் குற்றாலத்திலும் இவன் காணியாய்க் குடுத்த நிலத்துக்கு இவன் எழுத்திட்ட பிரமாணப்படி, இத்தேவர் திருநாமத்துக் காணி பிர்மதேசமெத்தங்குடி நிலம் மூன்றே முக்காலே இருமாவரை முந்திரிகைக்கீழ் எழுமாவரை முந்திரிகையும், உலகமாதேவிபுரத்து நிலம் வேலியும் நந்தவனம் அருமொழிதேவன் நிலம் ஒன்றே இரண்டுமாவும், குலோத்துங்கசோழன் குற்றாலத்து நிலம் இரண்டரையும், இவ்வூரில் பிராமணக் காணியான நிலம் இருபத்தொன்றே நாலு .... பத்தொன்பதரையேழும்மா .... இருமா முந்திரிகையும்

(வரி 3) முன்னுடையாரும், பழம்பேரும் வெள்ளானூர்களின்றுங் கூடுகிற நிலம் நகரத்து முதலும், விருதராஜ பயங்கர வளநாட்டுக் குலோத்துங்கசோழன் குற்றாலத்து நின்றுங் கூடுகிற நிலம் இந்நாட்டு முதலும் தவுந்து இவன் குடுத்தபடியே இத்தேவர்க்குத் திருநாமத்துக் காணியும், பிராமணர்க்குக் காணியும் இருபத்தொன்பதாவது முதல் குற்றாலமுடையான் பிர்மதேயத்தோடுங் கூட்டியும் இவ்வூர் கூடின நிலமுட்பட்ட நிலத்து இவ்வூர் விக்கிரம சோளீஸ்வரமுடையார்க்குத் திரு.... ....க்குளமும் திருநந்தவனம் .... இரண்டும் திருச்சிற்றம்பலம்.

(வரி 4) ச்சருப்பேதிமங்கலத்தோடும், காவிரிநல்லூர் நிலத்துகூடின நிலமாயும். நீங்கலாக நீக்கினநிலத்துச் செயதரப் பல்லவரையன் சண்டேஸ்வரப் பெருவிலைக்கொண்டு ஒங்காரீஸ்வரமுடையார்க்குத் திருமடைவிளாகமும் திருநந்தவனமும் உள்பட இவையிற்றுக்குக் குடுத்த நிலம் அரையே இருமாவரைக்கும் பிராமணர் குடியிருப்புக்கு மாகக் குடுத்தநிலம் அரையேயிருமா வரைக்கும்தலைபாறு அரிந்தவன் குற்ருலத்து நின்றுங்கூடின நிலத்து திருநாமத்துக் காணியான நிலத்துக்கு நந்தவனமாகச் செய்கிற நிலத்து ஊர்க்கணக்கு காவனூருடையான் எழுத்திட்ட கணக்குப்படி .... சுங்கந்தவிர்த்த குலோத்துங்கசோழ

(வரி 5) தேவற்குப் பதிஞருவது அளந்தபடி நீங்கல் நீக்கி நிலம் ஓறேக்கரும் இறைகட்டுக்குடலாக வருகிறபடிதவர்ந்து இருபத்தொன்பதாவது முதல் நீங்கலாக நீக்கியும் இருபத்தொன்பதாவது கட்டின நிலத்துக்குக் கடமை இறுக்குமிடத்து குலோத்துங்கசோழன் குற்ருலத்து நின்றுங்கிடன்த நிலத்து ஆருவது —— நிச்சயித்தபடி இறுத்து வருகிற நிலத்துக்கீழ் தன்ம நிச்சயித்தபடிக்குப் பத்தொன்பதாவது ஏற்றி இ.... ... க்க நீர்பாய்ந்த நிலத்துக்கு இறுத்து வருகிறநெல்லும் பிர்மதேசம் நிலத்துக்குடியிலும்........மொழிதேவனிலும் கூடின நிலத்துக்கு ஆழ் .... லும் நத்த .... இறுத்துவருகிற காரிலும், அ...............

(வரி 6) குடுத்த நெல்லு ஆயிரத்தொரு நூ.........பயிருக்குப்பத்தே கால் காசும்; வலையிறைக்க அரையே.........நல்காசும் ஆக காசு நாலும், நீக்கிநின்றதானத்திலும்..........

(வரி 7) தரச்சொன்னேம். இப்படிசெய்யப்பண்ணுக எழுதினேன் திருமந்திரஓலைக்கு நாராயணமூவேந்த வேளாரும், வில்லவராயரும், தொண்டைமானரும், விழிஞத்தரையரும்.

Inscription No. 2.

இடம்:— சண்டேஸ்வரர் கோயிலின் வடக்கு, மேற்குபுறச் சுவர்கள்.

(வரி 1) ஸ்வஸ்தி ஸ்ரீ புயல் வாய்த்து மண்வளர வென்ற பாட்டெழுதி, திரிபுவனச்சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங்கொண்டருளிய குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு இருபதாவது மீனநாயற்று பூர்வபக்ஷத்து பஞ்சமி

(வரி 2) யும்புதன்கிழமையும் பெற்ற ரோகணிநாள் ஜயங் கொண்ட சோழவளநாட்டு திருவழுந்தூர்நாட்டு—ச்சி ——த்து பிர்ம

தேசம் அனபாயபுரத்து ஊர்ரோம் குற்ருலம் உடையார் அரயன் ஆளுடைநாயனுரான ஜயதரப் பல்லவரையர் இந் நாட்டுக் குற்ருலமுடையார்

(வரி 3) பிர்மதேசத்து எழுந்தருளுவித்த உடையார்க்கு இக்கோயில் ஆதிசண்டேஸ்வரதேவர் திருநாமத்துக் காணியும் ஊர்கீழ் இறையிலியுமாக நாங்கள் நீர்வார்த்துக்குடுத்த நிலத்துக்குப் பிரமாண இசைவுதீட்டுக் குடுத்தபரிசாவது இவ்வனபாய புரத்து நிலமா.........குடுக்கிற

(வரி 4) நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை தலைகணிவாய்க்காலுக்கு மேற்கும் தெனபாற்கெல்லை பனைவாய்க்காலுக்கு வடக்கும், மேல் பாற்கெல்லை மாதிருமங்கலத்து எல்லைக்குலைக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை திருக்களிற்றுப்படி நீ(ர்)பாய் நிலத்துக்குத் தெற்கும் ஆகஇசைந்த பெருநா

(வரி 5) ன் கெல்லை நடுவுட்பட்ட விளைநிலம் குழி ராஜல் ரூப ச இந்நிலம் ஒருமாவரையும் காணியும் ஊர்கீழ் இறை யிலியுமாக விட்டு இந்நிலத்துக்கு ஊர்மாவிந்த சில்வரி பெரு வரி உள்ளிட்டன ஊரிலே நாங்களே இறுத்து அந்தராயம் பாட்டம் இறுக்கக் கட

(வரி 6) வோமாக இப்படி பிரமாண இசைவு தீட்டே பிரமாண மாவு தாகவும். இப்படி சம்மதித்து இந்நிலம் ஒருமாவரையும் காணி யும் ஊர்கீழ் இறையிலியுஞ் செய்து குடுத்தோம் இக்கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு அனபாயபுரத்து ஊரவரோம்.

(வரி 7) இப் பிராமண இசைவுத்தீட்டு எழுதினேன் இவ்வூர் ஊர்க் கணக்குக் காவனூருடையான் ஒளியன் சொன்னவாரறிவா னை நாற்பத்தெண்ணுயிரப்பிரியனென்.இவைஎன்னெழுத்து. இது........ இராஜ கம்பீர வேளான் கைம்மாட்டாங் கான மைக்கு இப்படிக்கு இவை இ........

(வரி 8) உதையராயனும் வாது செய்வார்.......யும் கைம்மாட்டாங் கானமைக்கு இப்படிக்கு இவை ஆளவந்தான் பொன்னம் பலங் எழுத்து. இப்படிக்கு .... எழுத்து. இது திருக்களிற் றுப்படி நம்பியும், செல்வ ஞானசம்பந்தரும், உலக பாலனும் ....

(வரி 9) மக்கு. இவை பொருளாபரணன் அக்காழ்வான் எழுத்து. இப்படிக்கு இவை தன்மபாலன் எழுத்து கொங்குலிப் பெரி- யன் கைம்மாட்டாது கன்டைக்கு இவை அமணகுடையா ரெழுத்து.

Inscription No. 3.

இடம்:— மகா மண்டபத்தின் வடபுறம். On the base.

(வரி 1) ஸ்வஸ்தி ஸ்ரீ புயல்வாய்த்து மண்வளர என்ற பாட்டெழுதி திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளின குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு இருபத்தைந்தாவது மீனநாயற்று பூர்வபக்ஷத்து ......கிழமையும் பெற்றநாள் ஜயங்........நாட்டு வீங்கு நீர்த் துருத்தி உடையார் சொன்னவாறறிவார் தேவதானம் காவிரி நல்லூராய ஊரவரோம். இந்நாட்டுக் குற்றாலமுடையான் பிர்மதேயத்துக் குற்றாலமுடை-

(வரி 2) யார் அரயன் ஆளுடைய நாயகனான ஜயதரப்பல்லவரையன் எழுந்தருளுவித்த ஓங்காரீஸ்வரமுடையார்க்கு இக்கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு .... யாக விட்ட நிலத்துக்கு பிரமாண இசைவுதீட்டுக்குடுத்த பரிசாவது. இக்காவிரிநல்லூரில் குடுத்த நிலம் இருமாவரை இதில் பிள்ளைஜயதரப்பல்லவரையர் காணியான நிலத்து இந்நாயனார்க்கு இவர் திருநாமத்துக் காணியாக விட்டநிலம் ஒருமா.

Inscription No 4.

இருக்கும் இடம்:— கருப்ப இல்லின் வடபுறச் சுவர்.

பு(வ)னச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் திரிபுவன வீரதேவற்கு யாண்டு.

(left unfinished)

Inscription No 5.

இடம்:— கருப்ப இல்லின் மேற்கு, தெற்குபுறச் சுவர்கள். அதாவது இலிங்கோற்பவ மூர்த்திக்குத் தென்பக்கம்.

(வரி 1) ஹர:— ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரி மெண்கொண்டான் ஜயங்கொண்ட சோழவளநாட்டு திருவழுந்தூர் நாட்டு குற்றாலமுடையான் பிர்மதேயம்

(வரி 2) உடையார் ஓங்காரி ஈஸ்வரமுடையார்கோயில் தேவகன்மிக்கும், ஸ்ரீ மாகேஸ்வர கங்காணி செய்வார்க்கும் ஸ்ரீ காரியஞ் செய்வார்க்கும்

(வரி 3) ....ல் சோழபுரத் தெல்லையில் காவேரி குலைக்கு வடக்கு விக்கிரமசோழன் மாதிரிமங்கலத் தெல்லைக்கு கிழக்கு பல்லவ நாராயணபு

(வரி 4) ——விபுரத்து எல்லைக்கு போகப்பட்ட படுகை நிலம்—— இந்நாயனார்க்கு திருநாமத்துக் காணியும் ஊர் கீழ்இறையிலி யும் ஆகவும் இவ்வூர் வாச்ச

(வரி 5) ம—— ணக்குடுத்து ——ன்றும் இவர்கள் தந்த சாசனப் படியே அனுபவிக்க—— வேணும் என்

(வரி 6) ——ம பாய் நமக்கு சொன்னமையில் இப்படிச் செய்யக்கட வதாகச் சொன்னோம். இவ்விடம் இவர்கள் தந்த சாதனப் படியே திருநாமத்து

(வரி 7) க்காணியும் ஊர்கீழ் இறையிலியும் ஆகமுன்பு அனுபவித்து வருகிறபடியேயனுபவிக்க எழுதினேன். திருமந்திரஓலை இராச நாராயண மூவேந்த வேளான் வில்லவ

(வரி 8) ரையர் எழுத்து. விழிஞத்தரையன்எழுத்து. வியனட்டரையன் எழுத்து. சித்தராயன் எழுத்து. அங்கராயன் எழுத்து. தொண்டைமான் எழுத்து.

Inscription No 6.

இடம்:— அர்த்த மண்டபத்தின் தென்புறம்

(வரி 1) உ. ஹர:— ஸ்வஸ்தி ஸ்ரீ புயல்வாய்த்து மண்வளர என்கிற பாட்டெழுதி திரிபுவனச்சக்கர ——ம் பாண்டியன் முடித் தலையுங் கொண்டருளிய குலோத்துங்க சோழதேவ

(வரி 2) ற்கு யாண்டு ந ய ஆவது மீனநாயற்று பூர்வ பக்ஷத்து சதுத் தியும் செவ்வாய்க்கிழமை —— நாள் ஜயங்கொண்ட சோழ வள நாட்டு திருவழுந்தூர் நாட்டுப் பல்லவநா

(வரி 3) ராயணபுரமான உலகமாதேவி புரத்து ஊரவரோம் குற்றால முடையான் அரையன் —— பல்லவரையர் குற்றாலமுடை யான் பிரமதேசத்து எழுந்தருளுவித்த உடை

(வரி 4) யார் ஓங்காரீஸ்வரமுடையார்க்கு திருநாமத்துக்காணியும், ஊர் கீழ் இறையிலியுமாக—— த்துக்கு பிரமாண இசைவு தீட்டுக்குடுத்த பரிசாவது இப்பல்லவந் நாராய

(வரி 5) ணபுரத்து ஊர்ப்போகவில் குடுத்த நிலத்துக்குக் கீழ் பாற் கெல்லை மாத்தூருடையான் விலை—— நிலத்து நீர்பாய் நிலத் துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை தில்லைநா

(வரி 6) யன் வாய்க்காலுக்கு வடக்கும், மேல்பாற்கெல்லை தச்சன் இறையிலிக்குக் கிழக்கு, வடபாற்கெல்லை குளத்தூருடையான் திருவுடை—— சன் கொல்லை நிலத்துக்குத் தெற்கும் ஆக இசை

(வரி 7) ந்த இந்நான்கெல்லை உள் நடுவுட்பட்ட நிலம் ஒருமா அரை. இந்நிலம் ஒருமாவரையும் காணியும் ஊர்கீழ் இறையிலியும் ஆக விட்டு இந்நிலத்துக்கு ஊர் [illegible] லவரி பெரு

(வரி 8) உள்ளிட்டன நாங்களே எற்றி இருத்து அந்தராயம் பாட்டம் தவிர்க கட்டுவோமாகவும் இந்நிலம் ஒருமாவரையும் இந்நாயனூற்கு சந்திராதித்தவற் காணியும் ஊர்கீழ் இறையிலியும் ஆகச் செய்து

(வரி 9) குடுத்தோம், இப்பல்லவரையன் புரத்து ஊரவரோம். இந்நிலத்துக்கு இவர்கள் வேண்டின போதே பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவோமாகவும் குடுத்தோம்........ இப்பிர

(வரி 10) மாண இரைவு தீட்டுட் பிரமாண........ தாகவும் இப்படி சம்மதித்து காணியும் ஊர்கீழ் இறையிலியும்செய்து குடுத்தோம். இவ் ஓங்காரீஸ்வரமுடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர்க்குப் பல்லவன்

(வரி 11) நாராயணபுரமான உலகமா தேவிபுரத்து ஊரவரோம். இப்பிரமாண இரைவுதீட்டு எழுதினேன். காவனூருடையான் சொன்னவாறறிவான் எழுத்து. இன்னம்

(வரி 12) இற்றை நாளில் இந்நாயனூர்க்குத் திருநாமத்துக்காணி

(வரி 13) யும் ஊர்கீழ் இறையிலியுமாக நீர்வார்த்துக் குடுத்த

(வரி 14) நிலத்துக்கு கீழ்பாற் கெல்லை

(வரி 15) இந்நாயனூர்க்கு முன்பு

(வரி 16) நீர்வாய்த்துக் குடுத்த நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை தில்லையான் வாய்க்காலுக்கு வட

(வரி 17) ஆக.......... நத்துக்கு தெற்கும் ஆக இசைந்த இன் நான்கெல்லையுள் நடுவுபட்ட

(வரி 18) குறைவுள்ளடங்க காணியும் ஊர்கீழ்இறையிலியும் நீர்வார்த்துக் குடுத்தோம். இந்நிலத்துக்கு உ.

Inscription No. 7.

இடம்:— அர்த்தமண்டபம், மகா மண்டபம் இவைகளின் தென்புறச் சுவர்.

(வரி 1) ஸ்வஸ்திஸ்ரீ ஓங்கார ஈஸ்வர: உ—ஹர—ஸ்வஸ்தி ஸ்ரீ திரி புவனச்சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங்கொ......................ன நாயற்று பூர்வபக்ஷத்து தஸமியும் திங்கள்கிழமையும் பெற்ற ரோகணி நாள் ஜயங் கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு.......... பூவால சுந்தரபுரத்து நகரத்தோம். குற்றாலமுடையான் ஆளுடைய நாயனுர் ஜயதரப்பல்லவரையர் இந்நாட்டுக் குற் ருலமுடையார்பிர்மதேசத்து எழுந்தருளுவித்த உடையார் ஓங் கார ஈஸ்வரமுடையார் திருநாமத்துக்காணியாக இறையிலி யாக நீர்வார்த்து......குடுக்கிற இவ்வூரில் காவேரி ஆற்றுக்கு வடக்கு ...... ஓடுதல்..........ம் சோழமா திருமங்கல............ ஸ்வர்க்குக்கிழக்குப்ப......

(வரி 2) முடைய பரமஸாமிக்கு ...... புரத்து எல்லைக்கு மேற்கும் பட்டப்படுகை நிலத்து இவ்வூர்க்கும் பலதரமிலி நிலமும் பரகாசிரியத்து நாணல் ந......திருநாமத்துக்காணியாய் ஊர் கீழ் இறையிலியாகக் குடுத்தோம். இந்நிலத்துக்கு ஊரமா யிருந்த கடமை குடிமை உ........கடவோமாகவும். அந்த ராயம் பாட்டத்தால் வந்த காசு தவிர்க்கக் கடவோமாகவும். இப்படி சம்மதித்து திருநாமத்துக்காணியும் ஊர்கீழ் இறை யிலியுஞ் செய்து குடுத்தோம். பூவாலசுந்தரபுரத்து நகரத் தோம். இது நகரப்பணியால் நகரக் கணக்கு.................. யான் திருவே.....................தில்லைக்கூத்தன். இது திருச்சிற் றம்பலச்செட்டி. பொருந்த அடைந்தவற்கன்பன் எழுத்து. உ........செயிச்சினுனமைக்கு இப்படி திருஞான சம்பந்த செட்டி எழுத்து. இப்படி இவை தினகரும்பு எழுத்து. இப்படி..........ங்கசெ.........இவை உத்தமசோழ செட்டி எழுத்து. இது இராசராசச்செட்டி குலோ....

(left unfinished)

Inscription No. 8.

இடம்:— மகா மண்டபம்.

(வரி 1) உ. ஹர: ஸ்வஸ்திஸ்ரீ புயல்வாய்த்து மண்வளர என்ற பாட் டெழுதி. திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும்

பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீ குலோத் துங்க சோழதேவர்க்கு யாண்டு இருபத்தைந்தாவது மகரநா யற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் சனிக்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள்........ண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு அகரம் ஸ்ரீ குற்றாலமுடையான் பிரமதேசத்து மகா ஸபையோம் எழுத்து. நம்மூர்க்கு மேலைஊர்க்குளத்து வட கரையில் பிள்ளை ஜயதரப்பல்லவராயர் எழுந்தருளுவித்த உடையார் ஓங்கார ஈஸ்வரமுடையார்கோயில் தேவகன்மியும், கோயி........

(வரி 2) இந் நாயனார்க்கு ஊர்கீழ் இறையிலியாக விட்ட ஸ்ரீ தேவி வதிக்குக் கிழக்கு, கணபதி வாய்க்காலுக்கு மேற்கு இரண் டாங் கண்ணாற்றுமுதற்சதிரத்து வடக்கடைய நிலம் இரண்டு நீக்கி இந்நிலம் ஒருமா. இதில் வடக்கிட்டு.......பாய் ஆறு கல்லின நிலம் முந்திரிகை நீக்கி நிலம் முக்காணி முந்திரிகை. இதில் மேற்கடைய மஞ்சள்வாய் ஆறு கல்லின நிலத்துக்குத் தலைமாறு இட்ட நிலம் அரைக்காணி கீழரையே மூன்றுமா அரைக்காணி நீக்கி தென்கிழக்கு நிலம் காணிக்கீழ் ஆறுமா முக்காணி அரைக்காணியும் இங்கே தென்கண்டத்து நிலம் அரைமா முந்திரிகைக் கீழ்மாகாணி.

(வரி 3) இதில் வடக்கடைய ஸ்ரீ தேவிவதி துடங்கி கிழக்கு நேர் நோக்கி மந்திரத்து ராஜேந்திரமூர்த்திபட்டன் நிலம் அறுதி யாக நீர்பாய் ஆமனகன் வாய்க்கால் நீக்கினகுழி பதினொன் றினால் நிலம் ஆறுமா.......அரைக்காணி நீக்கி நிலம் அரைமா ....நாலுமாக்காணி அரைக்காணியும் ஆக......சரத்துப்படி முக்காணி முந்திரிகை இந்நிலம் முக்காணி முந்திரிகைக்கீழ் மாகாணியும் ஊர்க்கீழிறையிலியாக கூட்டும் பிள்ளை ஜயதரப் பல்லவரையர் ஊர் விலை கொண்ட எட்டாந்தரத்துக் கொல்லை நிலம் அரைமா முந்திரிகைக்கீழ் ஒருமா. இதுக்கு வடக்கு கோமடத்து வீரதோண்பட்டன் உள்ளிட்டார் பக்கலும்

(வரி 4) ......ஸ்ரீ தக்ஷணபட்டன் உள்ளிட்டார் பக்கலும், பிருந்தூர் ......ழாக்கிபட்ட ஸோமகா.க யாஜியார் பக்கலும் ஆக இவ் அனைவர் பக்கலும்........நிலம். இந்நிலம் இருமா வரை முந்திரிகைக்கீழ் மூன்றுமா முக்காணி. இதில் இச் ஜயதரப் பல்லவரையர் பக்கல் நாங்கள் வடமேற்கடையவராய் விலை கொண்டு ஹெறபூச்சாரஹம்யாகக்கொண்ட அரைமா முந்திரி கைக்கீழ் ஒரு மாவும் இந்நிலத்தொடும் அடைய இவர் எங்களுக்கு தானமாகக்குடுத்த நத்தம்பத்தினால் நிமநிமாறு? மாக்காணியும் ஊர்க்களத்து.

(வரி 5) ....தானமாக தந்த..........ஞ்சினல் நிலம் முந்திரிகைக் கீழெட்டுமா அரைக்காணியும் ஆக இரண்டுமா......ழி ஐம்பத் தஞ்சினல் நிலம் முந்திரிகைக்கீழரையே......இந்நிலம் ஒருமா முக்காணி அரைக்காணிக்கீழெட்டு மாக்காணி அரைக்காணி யும் இச் ஜயதரப்பல்லவரையர் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் திருநந்தவனமும் உள்ளிட்டவையிற்றுக்கு உடையார் ஓங்கா ரீஸ்வரமுடையார்க்கு குடுக்கையால் இந்நிலத்தால் குழொன் பதுமாவரையின்..........முக்காணியும் இவ்

(வரி 6) ......ற்றி இ.......த்து இவர்க்கு இறையிலியாகக் குடுக்கவும் சொன்னேம். இப்படி இ......ஸஹாநியோம்.......எழுத்து. தக்ஷிணாமூர்த்திபட்டன் எழுத்து. திருச்சிற்றம்பலமுடைய பட்டன் எழுத்து. இவை......பட்டன் எழுத்து. இவை திருச்சிற்றம்பலமுடையான்பட்டன். திருவெள்ளறை நார ணற்கா.........முனியான்பட்டன். புற்றிடங்கொண்டான் பட்டன். இப்படிக்கு இவை......பட்டன்.......

(வரி 7) இப்படிக்கு இவை திருப்பேர் ஆளவந்தான்பட்டன். மதன கோவபட்டன் என்னெழுத்து. இப்படிக்கு பிருந்தூர்...... ராஜமூர்த்திபட்டன். இவை திருமங்கலத்து திருஞானசம் பந்தபட்டன் எழுத்து.

Inscription No. 9.

இடம்:— மகா மண்டபம்.

(வரி 1) உ. ஹர.— உ.ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்.......... கருவூரும் பாண் டியன் முடித்தலையுங் கொண்டருளிய குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு முப்பதாவது தநு நாயற்றுப்பூர்வ பக்ஷத்து.......புதன்கிழமையும் பெற்ற பூரட்டாதிநாள் ஜயங் கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு ஆளுடைய நாயகச்சேரி மஹாசபையோம் இவ்வூர் உடை யார் குற்றாலமுடையார் பிர்மதேசத்து ஓங்காரஈஸ்வரமுடைய கன்மிகளுக்குப், மஹ ஈஸ்வநியோஹம் குடுத்த பரிசாவது இவ்வூர்ப் பிடாகை

(வரி 2) குலோத்துங்க சோழன் குற்றாலத்து............ஜயதரப்பல்ல வரையர் பொத்தகப்படி நிலம் இருபது ....ஜயதரப்பல்ல வரையர் திருநாமத்துக்காணி.......பிரசாதஞ் செய்தருளின பொத்தகப்படி நிலம் இரண்டு இந்நிலம் இருமாவரையும் பத் தாவது கார்முதல் ஊர்கீழ் திருவாய் மொழிந்தருளினபடி யால் இருக்கவேண்டுமென்று இறையிலியாய் இந்நிலத்துக்கு

நெல்லும் எங்க.....கடவோமாக ஊர்கீழ் இறையிலி நிலத்துக்கு அந்தராயம் பாட்டம் உள்

(வரி 3) ளிட்டின கொள்ளாதே முயக்கடவோமாகவும் இவ்வூர்க்கு கீழ் இறையிலிசெய்து குடுத்த நிலம் இரண்டரையும் இந் நாயனர் அனுபவிக்கும் இடத்துப்பி

(வரி 4) ள்ளை ஜயதரப்பல்லவராயர் நிச்சயித்து கை ஓலை எழுதி இப்படியே அனுபவிக்கக் கடவராகவும் இப்படி ஸம்மதித்து இப்பொத்தகப்படி நிலம் இரண்டரை

(வரி 5) யும் முப்பதாவதுகார் முதல் ஊர்க்கீழ் இறையிலி செய்து குடுத்து மஹாஸஹாநியேஹமகுடுத்தோம் இவ்வுடையார் ஓங்காரீஸ்வரமுடையார் கோயில் ஆதி ச

(வரி 6) ண்டேஸ்வரதேவர் கன்மிகளுக்கு ஆளுடைய நாயகச்சேரி மஹாஸபையோம் இப்படி இவன் பணிக்க இவ்வூர்கீழ் இறையிலி மஹாஸஹாநியோஹம் எழுதினேன்

(வரி 7) இவ்வூர் ஊர்க்கணக்கு காவனூருடையான் சொன்னவாறறிவனை கணபதியாண்டானேன். இவை என்னெழுத்து. இப்படிக்கு இவை குரவசேரி நாராயணபட்டன்......இவை வங்கபுறத்துச் செட்டியாகன் இருளணக்கனை பட்டன். இவை மஹாமரத்து சிற்றம்பலமுடையாங்பட்டன். இப் படிக்கு.........ரம்யாஜி. இப்படிக்கு தக்ஷிணாமூர்த்திபட்டன்.

இடம்: மஹா மண்டபத்தில் உள்ள கல் துண்டுகளில்.

(In a slab)

த்துறை நிலம் இருவேலி
இற வேணும் என்று காரில
யு எழுத்தென்றும் அமரகோன்
ரதலு ஸந்திராதித்தவற்
ஆளுடைய நாயகரான காராணவி
நீர்பாய் வருகிற இன்னாட்டு ஓங்கார
ஒன்றே காலே அணிமு—

(In another slab)

ன்றையும் நிலம் — — —
திருநீற்றுச் சோழமங்கலத்தோடு இவ்
யார் சண்டேஸ்வரப் பெருவிலை ஒற்றிவைத்த
றுவர்த்திக்கவும் இவர்களும் இப்படி——மூமா.

(In another slab)

திருச்சிற்றம்பலச் சருப்பேதிமங்
கூடினநிலம் ஏழேமுக்காலேகாணி
கடவதல்லாதாகவும் இப்படிச்
செய்தாருண்டாரில் பெ
ரும்பற்றப்புலியூரிலும் திருவாரூரிலும்
மற்றுள்ள திருப்பதி.

(In another slab)

ஊர்கீழ் இறையிலியாக திருநாராயண
புரமான உலகமாதேவிபுரத்து நன்
ன — — த்தார் பட்டத்து சூழபடவும்
சோழக — —
ஸ்ரீமாஹேஸ்வரரோம் ஸம்மதித்து.

Inscription No. 10.

(Much damaged)

இடம்: இரண்டாம் கோபுரத்துத் தென்மதிலின்கீழ் புறச்சுவர்.

கருவூரும் பாண்டியன் — — வீராபிஷேகமும்
விஜயாபிஷேகமும் — — தேவர்க்கு யாண்டு

முப்பத்தாறுவது ஜயங்கொண்ட சோழவளநாட்டுத் திரு வழுந்தூர் நாட்டு குற்றாலமுடையான் பிரமதேசத்து திருச் சிற்றம்பலச்சேரியில் காவேரிகரை .... குற்றாலமுடைய பிரமதேசத்து ஊர்க்கணக்கு காவணூருடையானுக்கு இவ் வூர் திருச்சிற்றம்பலச்சேரி பட்டர்களில் திருப்பேர் தக்ஷிண மூர்த்திப்பட்டன் திருப்பேர் சொன்னவாறறிவார் பட்டன் பக்கலும் விலைகொண்டு உடையேனும் குழி ஆயிரத்து முன்னூற்றுச் சின்னமும் இவ்வூர் உடையார் ஓங்காரீஸ்வர முடையார்க்குத் திருநாமத்துக்காணியாக தன்ம தானமாகக் குடுத்தன. இத்தேவர் திருநாமத்துக்காணியான நிலத்தால் வந்தடமடக்குட்..... இவ்வாண்டு கார்முதல் கட்டிகா..... பண்ணு.

பிழையும், திருத்தமும்.

பக்கம்.	வரி.			
1	2	அர்த்தமண்டபம்	—	அர்த்தமண்டபம்,
,,	5	இதற்கு	—	இதற்கு,
,,	17	பிர்மதேவர்	—	பிரமதேவர்
2	6	ஓங்காரேச்சுவரம்	—	ஓங்காரேச்சுரம்
,,	19	பெயர் எய்திற்று	—	பெயர் எய்திற்று.
5	21	இது இம்மன்னன்	—	இஃது இம்மன்னன்
6	6	உணர்த்துகின்றது- மற்றொரு கல்வெட்டு.	—	உணர்த்துகின்றது மற்றொரு கல்வெட்டு.

113452